தமிழகம்

சிறப்பு ஆசிரியர்: தவத்திரு குன்றக்குடி அடிகளார்

மலர் 4] குன்றக்குடி 4—3—63 வார இதழ் விலை – 10 காசுகள். [இதழ் 15

மானிடச் சந்தையில்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் பொன்னுங்கண்ணிக்காடு இளைஞர் இலக்கிய மன்ற ஆண்டுவிழாவின் இரண்டாம் நாள் 10...2...63 நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து, 'மானிடச் சந்தையில்' என்ற தலைப்பில் ஆற்றிய ஆய்வுரையின் சுருக்கம் இங்கே தரப்பெறுகிறது.

—துணை ஆசிரியர்.

மானிடச் சந்தையில் பல்வேறு விதமான மனிதர்கள் இருந்திருக்கிறார்கள்; கோவலன் இருந்திருக்கிறான்; இராமன் இருந்திருக்கிறான்; இராவணனும் இருந்திருக்கிறான். மானிடச் சந்தையில் இணைத்துக் கட்டப்படாமலேயே மனிதர்கள் கூடிநிற்பார்கள்.

மனிதன் எதையும் எண்ணிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்; அந்த எண்ணத்தின் வழியாக—சிந்தனையின் வழியாகப் பல்வேறு கேள்விகளை எழுப்ப வேண்டும். நமது பழந்தமிழர்கள் எதையும் எண்ணித்துணிவார்கள்; துணிந்தபின் எண்ணமாட்டார்கள். அதுமட்டுமல்ல—துணிந்தபின் எண்ணுவது இழுக்கு என்று கூடக் கருதுவார்கள். எனவே அவர்களது அகத்துறையிலும் சரி, புறத்துறையிலும் சரி தகுதி இருந்தது, தரமும் இருந்தது. இன்று, எண்ணிச் சிந்திப்பதற்கான அக்கறை குறைந்துவிட்டது. எனவே, கேள்வி கேட்பதென்பதும் குறைந்துவிட்டது. கேள்விக்குச் சரியான விடையிறுப்பதென்பதும் அரிதாகிவிட்டது.

தமிழர்களில் பலர் நேற்று நேற்று என்றே கனவு கண்டுகொண்டிருக்கிறார்கள்; நேற்றைய நிகழ்ச்சிகளைக் கனவு கண்டு கொண்டிருப்பதால் எத்தகைய உருப்படியான பயனும் ஏற்படப் போவதில்லை—நாளை நாளை என்று கனவு கண்டாலாவது இன்றில்லா விட்டாலும் நாளை நாளை இல்லா விட்டாலும் நாளை மறுநாள் விடிவெள்ளி முளைக்கலாம்.

மனிதன் எண்ணுபவனாக-எண்ணித் துணிபவனாக-ஆளுபவனாக—ஆளப்படும் நேரத்தில் உறுதியுடையவனாக இருப்பது மானிடச் சந்தைக்கு இன்றியமையாத பண்பாகும்.

மனிதன் எண்ணுபவனாக—எண்ணித் துணிபவனாக வாழ்வது மானிடச் சந்தைக்கு இன்றியமையாத பண்பு

'மனிதர்கள் இயற்கையில் மிக நல்லவர்கள்; சமுதாயத்தால் கெடுகிருர்கள்' என்பது காந்தியடிகளின் கருத்து. மாக்ஸ் வெல்லியன் கருத்து இதற்கு முற்றிலும் மாருனது. 'மனிதன் அயோக்யனுப் பிறக்கிருன்; சமுதாயத்திற்குப் பயந்தே நல்லவனுக வாழ முயற்சிக்கிருன்' என்பது மாக்ஸ்வெல்லியின் சித்தாந்தம்.

'மனிதன் ஒளியுடையவன்; ஒளிபடைத்தவன்; ஒளியுடைவனுக வாழ முடியும். ஆனல் அவன் அறிவை வளர்த்துக் கொள்வதில்லை' என்ருர் சாக்ரடீஸ். நீண்ட காலமாக மனித சமுதாயம் தனது பகுத்தறிவைப் பயன் படுத்தத் தவறிவிட்டது. தந்தையின் அறிவை விட மகனறிவு தூயதாக இருக்கக்கூடும் என்பதை நம்ப வேண்டும். நம்மிலே பலர் யார் சொல்லுகிருர் என்பதைத்தான் பார்ப்போமேயொழிய என்ன சொல்லுகிருர் என்பதை ஆராய்வதில்லை. எனவேதான்,

''எப்பொருள் யார்யார்வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது
அறிவு''

என்ருர் திருவள்ளுவர். 'பகுத்தறிவால் ஆராய்ந்து பார்' என்ருர் சாக்ரடீஸ், ஏன் என்று கேட்பது பாவம் என்று கருதிய மானிடச் சந்தையைப் பார்த்து. மனிதன் தன்னைப் பற்றியே எண்ணிச் சிந்தித்து, ஏன் என்று கேள்வி கேட்கத் துணிய வேண்டும் என்று கூறினுர். சாக்ரடீஸ்.

பொதுவாக, பணத்தோடும் பதவியோடும் தொடர்பு கொண்டவர்களைச் சட்டத்

(9-ம் பக்கம்பார்க்க)

அப்பர் அளிக்கும் விருந்து

தலையாய மனிதர்

''மனிதரில் தலைசிறந்தவர் யார்?'' இந்தக் கேள்விக்கு அப்பரடிகள் மிக அழகாக பதில் கூறுகிருர்.

''இறைவன் ஒருவனே'' என்ற தெளிவான உறுதிப்பாடு தேவை. அது உயர்வு, இது தாழ்வு என்று குழப்பமுற்றுத் தடுமாருமல், பூவனூரில் எழுந்தருளியுள்ள புனிதனைத் தெளிந்த—கனிந்த மனத்தோடு அழுது அரற்றிப் போற்றுகின்றவர்களே மனிதரில் தலையாயவர். இதனை அப்பரடிகள் வாயிலாகவே கேட்போம்;

**''அனுசயப்பட்டு அதுஇது என்னுதே
கனிமனத்தொடு கண்களுநீர் மல்கிப்
புனிதனைப் பூவனூரனைப் போற்றுவார்
மனிதரில் தலையாய மனிதரே''**

தமிழகம்

அன்பாலே மக்கள்குலம் இணைந்து வாழும்
அருள்நெறியைப் பரப்புதலே எங்கள் நோக்கம்

மலர் 4] 4-3-63 [இதழ் 15

பாராட்டுகிறோம்

தமிழக அரசின் 1963-64-ம் ஆண்டுக்குரிய புதிய வரவு செலவுத் திட்டம் தமிழக மக்கள் பாராட்டத்தக்க வகையில் அமைந்திருப்பது பெருமகிழ்ச்சிக் குரியதாகும். புதிய வரவு செலவுத் திட்டத்தின் படி வருமானம் ரூ 124.45 கோடி; செலவினங்கள் ரூ 127.19 கோடி; பற்றுக்குறை ரூ. 2.74 கோடி. பொதுவாக, வரவு செலவுத் திட்டத்தில் ஏற்படுகிற பற்றுக்குறையைப் புதுவரிகள் போடுவதன் மூலம் சரிக்கட்டுவதே வழக்கம். எனினும், வழக்கத்திற்கு மாறாக, புதிய வரிகள் எதுவும் இல்லாத இந்தப் புதிய வரவு செலவுத்திட்டம் மிகமிக நிதானத்துடனும், மனத்திட்பத்துடனும் தயாரிக்கப் பெற்றுள்ளதாகும் என்பதில் ஐயமில்லை.

கல்வி, மதிய உணவுத்திட்டம் இவற்றிற்காக ரூ 28.93 கோடியும், பின் தங்கிய வகுப்பினர் நலனுக்காக ரூ 3.90 கோடியும் விவசாயிகளின் நலனுக்காக ரூ 2.60 கோடியும், பெரிய திட்டங்களுக்கு ரூ 18.78 கோடியும் முதலீடு செய்ய வழி வகுத்திருப்பது பெரிதும் பாராட்டுக்குரியது.

வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகை, திருத்தி யமைக்கப் பெற விருக்கும் வரவு செலவுத் திட்டத்தில் அடிபட்டுப் போனாலும் போகக்கூடும்; அப்படி இல்லையானாலும், நிதியமைச்சர் கூறியிருப்பது போல, மத்திய விற்பனைவரி ஒரு சத விகிதத்திலிருந்து இரண்டு சத விகிதமாக உயர்த்தப்படுவதன் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டும், சில ஆடம்பரப் பொருள்களின் விற்பனைவரி ஏனைய மாநிலங்களில் உள்ளது போல ஒரே சீராகத் திருத்தி அமைக்கப் படுவதன் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டும் சரிக்கட்டப்பட்டு விடக்கூடும். எனவே, அரசாங்கத்தின் நடைமுறைகளைக் குறைகூறுவதே கொள்கையாகவும், தொழிலாகவும் கொண்ட சிலரைத் தவிர வேறுயாரும் குறை கூற முடியாத—மாறாகப் போற்றி வரவேற்கத்தக்க இந்த வரவு செலவுத் திட்டத்தை தயாரித்தமைக்காகத் தமிழக நிதியமைச்சரை நாம் மனமாரப் பாராட்டுகிறோம்.

வரலாறு காணு வரி எனினும்

இந்திய அரசின் வரவு செலவுத் திட்டம் வெளியாகிவிட்டது. "இந்திய அரசாங்கத்தின் வரலாற்றிலேயே இதுவரை இவ்வளவு அதிகமான வரிகள் விதிக்கப் படவில்லை" என்று கூறத்தக்க வகையில் வரிச்சுமை ஏற்பட்டிருக்கிறது. "புதிய வரிகள் ஐயத்திற்கிடமின்றி மக்கள் மீது அதிகப் பளுவைச் சுமத்தக் கூடியதே" என்று நமது தலைவர் நேருஜியே ஒப்புக்கொண்டிருக்கிறார். எனினும், நாட்டின் முன்னேற்றத்தோடு பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காக்க வேண்டிய சூழ்நிலையும் நமக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது. சுதந்திரம் பெறுவதற்கும், பெற்ற சுதந்திரந்திரத்தைப் பேணிக் காப்பதற்கும் பிற நாட்டார் செய்த தியாகங்களையும், ஏற்றதொல்லைகளையும் எண்ணிப் பார்த்தால் புதிய வரிவிதிப்பை எதிர்த்து முணுமுணுக்கக்கூடத்தோன்றாது. எனவே நேருஜி கூறியுள்ளது போல சீனப் படை எடுப்பை அடிப்படையாக வைத்துப் புதிய வரித்திட்டங்களை நோக்குவதுதவிர வேறுவழியில்லை. **துணை ஆசிரியர்**

வாழ்விக்க வந்தோர் வரலாறு

10. எறிபத்தர்

(முன் தொடர்ச்சி)

செய்தியைக் கேள்வியுற்ற திறல் மிகு சோழ மன்னர் சிங்கத்தின் ஏறெனச் சீறி எழுந்தார். குதிரை மீதேறிக் குறித்த இடம் நோக்கிப் பறந்தார். 'அண்ணல் யானை அணிதேர்ப்புரவி ஆட் பெரும் படை' யெனும் நால்வகைச் சேனைகளும், பிறவும் அவரைச் சூழ்ந்து சென்றன. படையெழுந்த திறத்தைக் கூறப்புகுந்த பைந்தமிழ்ச் சேக்கிழார்,

'எந்திரத் தேரும் மாவும்
இடைஇடை களிறு மாகி
வில்லொடு வேல்வாள் தண்டு
பிண்டிபா லங்கள் மிக்க
வல்லெழு முசலம் நேமி
மழுக்கழுக் கடைமுன் னான
பல்படைக் கலங்கள் பற்றிப்
பைங்கழல் வரிந்த வன்கண்
எல்லையில் படைஞர் கொட்புற்
றெழுந்தனர் எங்கும் எங்கும்!'

என்று பேசுகிறார்.

தண்ணளிக் கவிகை மன்னர், களிறொடு பாகர் வீழ்ந்த களத்தினைச் சென்றடைந்தார். படுகளத்திலே பகைவரைக் காணாமல், விடுசுடர் மழு வேந்தி அடுகளிறு போல நின்ற அன்பரைக் கண்டார்; யானையைக் கொன்றவர் எறிபத்தரே எனத் தெளியாமல்; 'யானையைக் கொன்றார் யார்?' என வினவினார். 'மழுவேந்தி நிற்கும் இவரே நமது யானையைக் கொன்றவர்' என்றனர் அங்கிருந்த பாகர்கள்.

சீர்புகழ்ச் சோழ மன்னர் திடுக்குற்று, 'குழையணி காதினானுக்கு அன்பர் இவர்; இவர் குணத்தின் மிக்கார்; யானை ஏதாவது பிழை செய்திருந்தாலன்றி, இவர் அதனைக் கொன்றிருக்க மாட்டார்' என்று எண்ணினார்; சேனைகளையெல்லாம் தடுத்து நிறுத்திவிட்டுக் குதிரையினின்றிறங்கினார். 'ஐயகோ! 'மதக்களிற்றின் எதிரே இந்த மெய்த்தவப் பெரியார் சென்ற போது வேறேதும் நிகழாதிருந்ததே! அது நான் முன்செய்த தவமே யன்றோ? அடியவர் இத்தனை முனியக் கெட்டேன்; என்ன பிழை நேர்ந்ததோ?' என்று அச்சமுற்று அம்பலவாணர்தம் அடியாரின் முன்சென்று தொழுது நின்று, 'யானையைக் கொன்றவர் அடியவர் என்பதை அறிந்திலேன்; அங்கு நான் கேட்டதொன்று, இந்த யானை செய்த பிழைக்கு இதனைப் பாகரோடு மாய்த்தது போதுமோ?' என்று பணிவொடு வினவினார். நடந்த நிகழ்ச்சியை நாயனார் கூறினார்.

நாயனார் கூறிய அனைத்தையும் கேட்ட 'பருவரைத் தடந்தோள் மன்னர்,' நாயனார்தம் தாள்களைப் பணிந்து போற்றி, 'சிவனடியார்க்கு இழைத்த தீங்குக்கு யானையையும் பாகர்களையும் கொன்றது போதாது; என்னையும் கொன்றழித்தல் வேண்டும். ஆனாலும், அடிகள் தம் மங்கல மழுவால் அடியேனைக் கொல்லுதல் முறைமையன்று' என்று மொழிந்து, 'ஐயனே! இதனால் என்னைக் கொன்றருளுங்கள்' என்றியம்பித் தமது உடைவாளை எடுத்து நீட்டினார். எறிபத்தர், மன்னரின் உடைவாளை வாங்கினார். மன்னர் பெருமானைக் கொன்றழிக்கும் மனத்தினராக அன்று; 'அந்தோ! இவர் அன்பர்! வாளினை நாம் வாங்கவில்லையானால், தற்கொலை செய்து கொள்வார்' எனுங் கருத்திலேயே அவர் உடைவாளை வாங்கினார்.

ஆ!, இந்தப் பெரியவர் அடியேனைக் கொன்று என் பிழை தீர்க்கும் பேறு பெற்றேனே?' என்று பெரிதும் மனமகிழ்ந்தார், பெரும் புகழ்ச் சோழ மன்னர். எறிபத்தரோ, இத்தகு அன்பர்க்கோ யான் தீங்கிழைத்தேன்? யான் பாவி! முதலிலே என் உயிரை மாய்த்துக் கொள்ளுதலே முறை' என்று உறுதி கொண்டு, வாளால் தமது கழுத்தை அரிந்து கொள்ள முயன்றார். இதைக் கண்ணுற்ற சோழ மன்னர், 'கெட்டேன்! கெட்டேன்!' என்று கதறிக்கொண்டு, வாளையும் எறிபத்தரின் கையையும் பிடித்துத் தடுத்து நிறுத்தினார். 'மன்னர் நம்கையைப் பற்றினரே' என்று மனம் வருந்திநின்றார்

எறிபத்தர். பேரன்புப் பெருக்கமல் நேர்ந்தது இந்த இடுக்கண்.

அளவிலாப் பற்றுல் வந்த இடுக்கணை அகற்ற வேண்டி, 'உங்கள் திருத்தொண்டின் பெருமையினை உலகுக்குக் காட்ட எம்பெருமான் திருவருளால் இவையனைத்தும் நிகழ்ந்தன' என்று வானொலி (அசரீரி) ஒன்று கேட்டது. உடனே, மாண்ட யானை மீண்டும் உயிர் பெற்றெழுந்தது; பாகர்களும் உயிர் பெற்றெழுந்தனர்; எறிபத்தர் வாளை விடுத்து, மன்னு புகழ்ச்சோழ மன்னரை வணங்கினார். மன்னரோ, வாளினை வீசி எறிந்து, எறிபத்தரின் தாளினைப் பணிந்து நின்றார். இருவரும் திருவருளை வழுத்தினர்; திருவருளால் கூடையில் மலர்கள் நிறைந்தன; அத்திருவருள் கண்டு, சிவகாமியாண்டாரும் மகிழ்ச்சிப் பெருங்கடலில் திளைத்தார்.

பட்டத்து யானையை அழைத்துக் கொண்டு, பாகர்கள் மன்னர்முன் வந்தனர். எறிபத்தரின் வேண்டுகோளுக்கு இணங்க, புகழ்ச்சோழர் யானை மீதேறிச் சேனைகள் புடைசூழ அரண்மனையை அடைந்தார். சிவகாமியாண்டார் மலர்க்கூடையைத் தண்டிலே தாங்கித் தொண்டு புரியச் சென்றார். எறிபத்தர் நாளும் நாளும் நற்றவக் கொள்கை தாங்கி, ஏற்ற திருத்தொண்டை இனிதுறச் செய்து, திருக்கயிலையில் நொற்றவர் கணங்களுக்குக் கோமுதல் தலைமை பெற்றார்.

ஆளுடைத் தொண்டர் செய்த
ஆண்மையும், தம்மைக் கொல்ல
வாளினைக் கொடுத்து நின்ற
வளவனார் பெருமை தானும்
நாளுமற் றவர்க்கு நல்கும்
நம்பர்தாம் அளக்கி லன்றி
நீளும்இத் தொண்டின் நீர்மை
நினைக்கில்யார் அளக்க வல்லார்?'

என்று சேக்கிழார் பெருமானின் தெய்வத்தமிழ் கேட்கிற தென்றல், திருத்தொண்டின் பெருமையை-திருத் தொண்டர்தம் சீர்த்தியை அளக்க நமக்கேது வலிமை?

வருந்துகிறோம்

தமிழக சட்டசபையின் போடிநாயக்கனூர்த் தொகுதி காங்கிரஸ் உறுப்பினர் திரு ஏ. எஸ். சுப்பராஜ் 22-2-63-ல் காலமானர் என்ற செய்தியறிந்து வருந்துகிறோம். அவர் பிரிவால் வருந்தும் அவர் தம் குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

எல்லாரும் நல்லமுறையில் வாழ்வதற்குப் பல்லாற்ருனும் அடிகளார் பணியாற்றுகிருர்கள்

அருள்நெறிக் கல்வியகங்களின் இலக்கிய மன்றத்தில் திரு. விவேகானந்தம் பிள்ளை பாராட்டு

அருள் நெறிக் கல்வியகங்களின் சார்பில் குன்றக்குடி ஆசிரியைப் பயிற்சிப் பள்ளியில் 28—2—63ல் நடைபெற்ற இலக்கியமன்றக் கூட்டத்திற்கு தமிழ்நாடு அறநிலையத்துறைத் தணிக்கை அதிகாரி திரு விவேகாநந்தம் பிள்ளை அவர்கள் தலைமை வகித்து அரியதோர் உரையாற்றினர். அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது

குன்றக்குடியில் திருவண்ணாமலை ஆதீனத்தின் சார்பில் இத்தனை கல்வி நிறுவனங்களும் இவ்வளவு சிறப்பாகவும் அழகாகவும் நடைபெறுவது தனிச் சிறப்பளிப்பதாகும்.

இது மிகவும் ,அழகான ஊர்; குன்றின் மீது நான் நின்று பாத்தபோது, பல்வேறு பள்ளிகளையும் கண்டேன்; எல்லார்க்கும் கல்வியளிப்பதின் மூலம் தவத்திரு அடிகளார் அவர்கள் சிவ சமயத்தைப் பரப்புகிருர்கள்.

அன்பும் சிவமும் வெவ்வேறல்ல. இரண்டும் ஒன்றுதான் இதை நன்கு உணர்ந்தே நமது அடிகளார் அவர்கள் அன்பை நடைமுறையில் எடுத்துக்காட்டிவருகிருர்கள்.

அதிகப்படியான சொத்தும் அதிகப்படியான வருமானமும் உள்ள பல பெரிய ஆதீனங்களை எனக்குத் தெரியும். இது மிகவும் சிறிய ஆதீனம். குறைந்த வருவாயுள்ள ஆதீனம். எனினும், இவ்வளவு அழகாகவும், சிறப்பாகவும் இத்தகு பள்ளிகளை அவர்களெல்லாம் நடத்துகிருர்கள் என்று செல்ல முடியாது.

குன்றக்குடி என்ற பெயரைப் பற்றி நான் எண்ணிப் பார்த்தபோது எனக்கு ஒரு பொருள்பட்டது, அதாவது, ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் குன்றுமாறு ஆண்டவன் எழுந்தருளிக் காட்சி தருகிருன் என்பது போல எனக்குப் பொருள் பட்டது.

இங்குள்ள கோயில் மிகவும் நல்ல முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. தவத்திரு அடிகளார் அவர்கள் அடிக்கடி உங்கள் கல்விக் கூடங்களுக்கு வந்து, ஞானசிரியனுக இருந்து அவ்வப்போது உங்கட்கு அறிவுரைகள் கூறி வருவதால், நீங்கள் எல்லாம் அன்பாலும், பண்பாலும் ஒழுக்கத்தாலும், அறிவாலும் சிறந்தவர்களாக இருப்பீர்கள். என்பதில் ஐயமில்லை.

பொதுவாக ஆடவர்களுக்கும் பெண்களுக்கும் ஒழுக்கம் அவசியம்; பெண்கள் ஆண்களைத் தங்கள் ஒழுக்கத்தால் திருத்தலாம். பெண்கள் பாவைநோன்பு போன்ற பல நோன்புகளை மேற்கொள்ள வேண்டும். நோன்பின் தத்துவங்களை நன்ருகப் புரிந்து கொள்ள வேண்டும்.

கல்வி கற்பதின் பயன் உத்தியோகத்திற்குப் போவதோ, சம்பாதிப்பதோ அல்ல, கடவுளை வணங்குவதுதான்- இறைவனிடம் பக்தி கொள்வதுதான் நீதி நூல்களைக் கற்கவேண்டும்; கற்றவழி நிற்கவேண்டும்.

'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே என்று தாயுமானர் கூறியது போல, எல்லாரும் நல்ல முறையில் வாழ அடிகளார் அவர்கள் பலவாருகப் பணிபுரிந்து வருகிருர்கள். அடிகளார் அவர்கள் தூய அன்புள்ளம் கொண்டவர்கள்; ஆத்மாக்களுக்குச் செய்யும் தொண்டு ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டு என்று கருதிச் சிறந்த முறையில் மக்கட்தொண்டு செய்து வருகிருர்கள். அவர்களுக்கு எனது கனிவான பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன் என்று குறிப்பிட்டார்கள்.

பின்னர் மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கலை நிகழ்ச்சிகளை திரு. விவேகாநந்தம் பிள்ளை அவர்கள் பாராட்டிப் பேசுகையில் மாணவியர் மிகச் சிறப்பான முறையில் கலைநிகழ்ச்சிகளை நடத்திக் காட்டினுர்கள்; இத்துறையில் இவர்களை ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்று கூறுவது மிகையாகாது; அவர்கட்கு என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன் என்ருர்.

அடிகளார் உயர் நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. அ. சோமசுந்தரம் நன்றி கூற நாட்டு வாழ்த்தோடு கூட்டம் இனிது நிறைவெய்தியது.

கற்ற கல்வியை மறந்துவிடுவதென்பது தேடிய பணத்தை தெருவில் போடுவதொக்கும்

குன்றக்குடியில் தவத்திரு அடிகளார்

குன்றக்குடியில் திருவாதவூர் திரு. வி. க. புண்ணிய விடுதியின் 10-வது ஆண்டு விழா 3—3—63-ல் தவத்திரு அடிகளார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. கோ. சீனிவாசன் அனைவரையும் வரவேற்று ஆண்டறிக்கையைப் படித்தார்.

தவத்திரு அடிகளார் அவர்கள் தமது முன்னுரையில் குறிப்பிட்டதாவது:

"பத்து ஆண்டுகளுக்கு முன் பஞ்சப் பகுதிகளில் ஆங்காங்கு கஞ்சித் தொட்டிகள் ஏற்படுத்தப் பெற்றன. சமுதாயத்தில் வசதியும் வாய்ப்பும் இல்லாத குழந்தைகள் கஞ்சித் தொட்டிகளில் கஞ்சி வாங்கிக்குடித்தே காலத்தைக் கடத்திவிடக் கூடாதே என்ற எண்ணத்தின் அடிப்படையில் தான் இந்த விடுதியை ஏற்படுத்தினோம். அது தத்தித்தத்தித் தளர்நடை போட்டு இன்று 300 குழந்தைகளைப் பராமரிக்கும் ஒரு விடுதியாக வளர்ந்திருக்கிறது.

நோயின்றி வாழ்வதற்குப் பத்திய உணவு தேவை. கம்பு, கேப்பை, கேழ்வரகு முதலியன உடம்புக்கு நல்லது என்றால் சிலர் கேப்பை சாப்பிடுவதா, கம்பு சாப்பிடுவதா, கேழ்வரகு சாப்பிடுவதா என்கிறார்கள். இவையெல்லாம் சத்துள்ள உணவுகள் - எளிய உணவுகள்.

இன்று மனிதன் பலவகையாலும் தனது தேவைகளைப் பெருக்கிக் கொண்டிருக்கிறானே யொழிய வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்கான



வழிவகைகளை ஆராயக்கூட இல்லை.

நான் ஏழை—அநாதை என்ற தாழ்வு மனப்பான்மை யாருக்கும் இருக்கக் கூடாது. நாம் சுதந்திர நாட்டின் குடிமக்கள்; சமுதாயத்திலிருந்து உதவி பெற நமக்கும் உரிமையுண்டு என்ற எண்ணம் வேண்டும்.

கற்ற கல்வியை மறந்துவிடுவது என்பது சம்பாதித்த பணத்தைத் தெருவில் போட்டுவிட்டுவருவது போன்றது. கற்ற கல்வியை மறந்துவிட்டால் உற்ற நேரத்தில் அது கைகொடுத்துதவாது. இங்குள்ள குழந்தைகள் எல்லோரும் நன்றாகப் படித்து, நல்லமுறையிலே தேர்வில் வெற்றிபெற்று, வாழ்வாங்கு வாழ்ந்து உங்கள் குடும்ப வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்துங்கள். நமக்கு முன் வாழ்ந்தவர்கள் செய்த தவறுகளை நாமும் செய்யக்கூடாது; அவர்கள் செய்த தவறுகள் நமக்குப் படிப்பினையாக இருக்கவேண்டும்.

நமது பக்கத்தில் வாழ்பவர்களை அண்ணன் தம்பிகளாகவும், அக்காள் தங்கைகளாகவும் கருதி அன்பு செலுத்திக் குடும்ப உணர்வோடு வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். இல்லையானால் சமுதாயம் கரடி, புலி, சிங்கம் முதலியன வாழும் காடாக மாறிவிடும் என்றார்கள்.

ஒருகுடும்ப உணர்வோடு வாழக் கற்றுக் கொள்ளுங்கள் இல்லையேல் சமுதாயம் கரடி புலி வாழும் காடாகிவிடும்

இதன்பின் இல்லத்தினர் தயாரித்த ஆண்டுமலரை கல்லல் வட்டார வளர்ச்சி அலுவலக தொழில் அபிவிருத்தி அதிகாரி திரு. சந்திரமோகன் வெளியிட்டு, மலரின் தயாரிப்பாளர்களைப் பாரராட்டினார். மேலும் அவர் பேசுகையில் எல்லா வகையிலும் குன்றக்குடியை ஒரு தன்னிறைவுடைய கிராமமாக ஆக்குவதில் தவத்திரு அடிகளார் அவர்கள் சிறப்பான முறையில் தொண்டாற்றி வருவதாகக் குறிப்பிட்டார்.

பின்னர் கல்லல் வட்டார வளர்ச்சி கூட்டுறவுத் துறை உதவிப் பதிவாளர் திரு. துரைராஜ் மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். அவர் பேசுகையில் தவத்திரு அடிகளார் அவர்கள் ஒரு பலநோக்குக் கூட்டுறவு இயக்கம் போல, பலதுறைகளிலும் கவனம் செலுத்தி ஆவன செய்து வருகிறார்கள் என்றார்.

மாணவ மாணவியர் கூட்டுறவுப் பண்டக சாலை ஒன்று நிறுவ மாணவ மாணவியர் பங்குத் தொகையாக தவத்திரு அடிகளார் அவர்கள் மூலம் ரூ 500 வழங்கப் பெற்றது. பின்னர் மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகளும் 'கண் திறந்தது' என்ற நாடகமும் நடைபெற்றன. தவத்திரு அடிகளார் அவர்கள் நாடகத்தைப் பாராட்டிப் பரிசுகள் வழங்கினார்கள். திரு கோ. சீனிவாசன் நன்றிகூற நாட்டுவாழ்த்தோடு கூட்டம் இனிது நிறைவெய்தியது.

செய்திச் சுருள்

திண்டுக்கல் பாரதி மாணவர் இல்லம்

திண்டுக்கல் பாரதி மாணவர் இல்லத்தின்சார்பில், 23-2-63ல் அமரர் வைத்தியநாத அய்யர் நினைவு நாள் விழா தமிழக அமைச்சர் மேதகு பி. கக்கன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருவாளர்கள் ஜி. ஜாஸ், எம். பி., ஆர். ரெங்கசாமி ரெட்டியார் எம். எல். ஏ., கே. கணேசன், திருமதி கே. எம். நாகலம்மாள் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தவத்திரு அடிகளார் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இராசிபுரம் திருக்குறள் ஆட்சி மன்றம்

இராசிபுரம் விவேகானந்த நகர திருக்குறள்ஆட்சிமன்றத்தின் சார்பில் 24-2-63-ல் தவத்திரு அடிகளார் அவர்கள் தலைமையில், சங்கத்தமிழ் சிறந்ததா? சமயத் தமிழ் சிறந்ததா எனுந்தலைப்பில் ஒரு பட்டிமன்றம் நடைபெற்றது. சங்கத்தமிழ் சிறந்தது என்று திருவாளர்கள் இரா. பெரியசாமி, கு. சிவசங்கரன், ஏ. விவேகானந்தன் ஆகியோரும், சமயத்தமிழ் சிறந்தது என்று திருவாளர்கள் பி என். பெரியதம்பி, எஸ் குப்புசாமி, க. பசுவய்யன் ஆகியோரும் பேசினார்கள்.

தவத்திரு அடிகளார் அவர்கள் பேசுகையில், சங்கத் தமிழில் காலத்தினால் காணப்பெற்ற சில குறைபாடுகளைச் சமயத்தமிழ் காலத்தினால் நிறைவுடையதாக்கியது என்றும், தமிழ் நாகரிகத்தைச் சமயத்தமிழ் காப்பாற்றியது என்றும் இரண்டில் சிறந்தது எது என்று சீர்தூக்கிப்பார்ப்பது நல்லதல்ல என்றும் இரண்டுமே சிறந்தன என்றும் குறிப்பிட்டார்கள்.

இராசிபுரம் சன்மார்க்க சங்கம்

இராசிபுரம் சன்மார்க்க சங்கத்தின் சார்பில், 24-2-63-ல் பொன்வரதராசப் பெருமாள் ஆலயத்தில் தவத்திரு அடிகளார் அவர்கள் 'திருநாவுக்சரசின் தொண்டு' எனுந்தலைப்பில் அரியதோர் உரை நிகழ்த்தினார்கள்.

மெனிசி துவக்கப்பள்ளி

மெனிசி ஊராட்சி ஒன்றிப்புத் துவக்கப்பள்ளியின் பொன் விழாவும் வள்ளுவர் விழாவும் 25-2-63-ல் நடைபெற்றன. பொன்விழாவிற்கு திரு. வேடியப்ப உடையாரும் திருவள்ளுவர் விழாவிற்கு திரு. டி. என். தீர்த்தகிரி கவுண்டரும் தலைமை வகித்தனர். "வள்ளுவர் கண்ட

அருள்நெறி'' எனும் பொருள் பற்றி தவத்திரு அடிகளார் அவர்கள் அரியதோர் உரை நிகழ்த்தினுர்கள்.

தருமபுரி ஆதாரப் பயிற்சிப் பள்ளி இலக்கிய மன்றம்

தருமபுரி அரசினர் ஆதாரப் பயிற்சிப்பள்ளி மாணவர் இலக்கியமன்ற நிறைவு விழா 25-2-63 ல் தருமபுரி மாவட்ட கல்வி அதிகாரி திரு. எம். கே. நாகராசன் அவர்களால் துவக்கி வைக்கப்பெற்றது. தவத்திரு அடிகளார் அவர்கள் சிறப்புரையாற்றினுர்கள்.

தருமபுரி ஔவை இலக்கிய மன்றம்

தருமபுரி ஔவை இலக்கிய மன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடர் 25-2-63-ல் திரு. எம். கே. நாகராசன் தலைமையில் நடைபெற்றது. தவத்திரு அடிகளார் அவர்கள் வள்ளுவரின் அறநெறியும் தமிழர் கண்ட சமயமும் எனும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினுர்கள்.

அரூர் மாணவர் இலக்கிய மன்றம்

அரூர் உயர்நிலைப் பள்ளி மாணவர் இலக்கிய மன்ற ஆண்டு விழா 26—2—63-ல் அரூர் ஊராட்சி ஒன்றியப்புத் தலைவர் திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் தலைமையில் நடைபெற்றது. தவத்திரு அடிகளார் அவர்கள் 'காலமும் கல்வியும்' என்பது பற்றி அரியதோர் உரை நிகழ்த்தினுர்கள். தவத்திரு அடிகளார் அவர்கள் பேசுகையில், புதிய உலகத்தினேடு சமுதாயத்தை இணைப்பது, தேவைகளை நிறைவு செய்வது, குறைகளைப் போக்கி நிறைவு செய்வது இவையே கல்வியின் பயன் என்று குறிப்பிட்டார்கள்.

இராசிபுரம் ஆசிரியர்கள் இலக்கிய மன்றம்

இராசிபுரம் பள்ளிகளின் ஆசிரியர்கள் இலக்கிய மன்றக் கூட்டம் 24-2-63 ல் நடைபெற்றது. தவத்திரு அடிகளார் அவர்கள் விழாவில் கலந்து கொண்டு அரியதோர் உரை நிகழ்த்தினுர்கள்

மெனிசி வள்ளலார் அருள் நெறி மன்றம்

மெனிசியில் வள்ளலார் அருள் நெறி மன்றத்தினர் அருட்சோதி வள்ளலார் அவர்கட்காகக் கட்டப் பெற்ற ஆலயத்தை 25-2-63 ல் தவத்திரு அடிகளார் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

பாப்பாரப்பட்டி திருவள்ளுவர் மாணவ இலக்கிய மன்றம்

பாப்பாரப்பட்டி கழக உயர் நிலைப்பள்ளி திருவள்ளுவர் மாணவர் இலக்கியமன்றத்தின் சார்பில் 26-2-63 ல் நடைபெற்ற கூட்டத்தில் தவத்திரு அடிகளார் அவர்கள் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினுர்கள்.

கோவை கோனியம்மன் கோயில் பிரம்மோற்சவம்

கோவை ஸ்ரீ கோனியம்மன் பிரம்மோற்சவத்தை 26-2-63ல் கோவை மாவட்ட போலீஸ் அதிகாரி திரு. ஏ. முருகேசன் துவக்கிவைத்தார். தவத்திரு அடிகளார் அவர்கள் சொற்பொழி வாற்றினார்கள்.

பல்லடம் அமரன் ஜெயப்பிரகாஷ் நினைவுநாள்

பல்லடம் ஸ்ரீ அமரன்ஜெயப் பிரகாஷ் ஐந்தாவது ஆண்டு நினைவு விழாவில்- 27-2-63 ந் தேதி நிகழ்ச்சியில் தவத்திரு அடிகளார் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினர்கள்.

அடிகளாரின் உவமை நயம்

கொடிக் கம்பத்தை நட்டதும் நிழல் விழுவதுபோல, நாம் ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கியதும் அதனை எதிர்ப்பவர்களும், ஏளனம் செய்பவர்களும் தோன்றத் தான் செய்வார்கள். நிழலைக் கொடிக்கம்பம் பொருட்படுத்தாததுபோல நாமும் நல்ல காரியத்திற்கு ஏற்படுகின்ற எதிர்ப்பையும் ஏளனத்தையும் பொருட்படுத்த வேண்டியதில்லை.

தேசிய இழப்பு

இந்தியக் குடியரசின் முதலாவது ஜனாதிபதி டாக்டர் இராசேந்திர பிரசாத் 28-2-63ல் காலமானார் என்ற செய்தி பெரிதும் திடுக்குறத் தக்கதாகும். காந்திய சகாப்தத்தின் சிறந்த தலைவர்களில் டாக்டர் இராசேந்திர பிரசாதும் ஒருவர். டாக்டர் இராசேந்திர பிரசாத் நேர்மை, ஒழுக்கம், சீலம், கண்ணியம் அடக்கம் ஆகியவற்றின் சின்னமாகத் திகழ்ந்தவர். தேசத்தின் நல்வாழ்வே தன் வாழ்வு என்று கருதிய சிறந்த தலைவர். இந்த நெருக்கடி நேரத்தில் அவர் மறைந்தது ஒரு பெரிய தேசிய இழப்பாகும்.

டாக்டர் இராசேந்திர பிரசாத் அவர்களின் இழப்பால் ஏற்பட்ட பெருந்துக்கத்தில் இந்த நாட்டு மக்கள் கட்சி இன, கொள்கை வேறுபாடின்றிப் பங்கு கொள்ளுகின்றனர்.

பல்லடம் கழக உயர்தரப் பள்ளி இலக்கிய மன்றம்

பல்லடம் கழக உயர்நிலைப் பள்ளியின் இலக்கிய மன்றக் கூட்டம் 27—2--63 ல் நடைபெற்றது. தவத்திரு அடிகளார் அவகள் அரிய தோர் இலக்கியச்சொற்பொழி வாற்றினர்கள்.

அடிகளார் சுற்றுப்பயணம்

மார்ச்

7 சிதம்பரம்
9 பேரூர் [கோவை]
10 நீலகிரி மாவட்டம்
11 ஷ
12 ஷ
13 கொப்பனுபட்டி
14 திருவாதவூர் மதுரை
15 திருச்சி

★

தேவாரப் பொன்மொழிகள்

நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்.

ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை.

நெஞ்சினைத் தூய்மை செய்து நினைக்குமா நினை.

அம்பலக் கூத்தனைத் தினைத் தனைப் பொழுதும் மறந்து உய்வனே!

ஊன் நிலாவி உயிர்க்கும் பொழுதெலாம் நான் நிலாவி இருப்பன் என்நாதனை.

படைக்கலமாக உன் நாமத்து எழுத்தஞ்சு என் நாவிற் கொண்டேன்.

நித்தல் ஏத்துவார் தீரா நோயெல்லாம் தீர்தல் திண்ணமே.

பொற்பாதமும் காணப் பெற்றால் மனித்தப் பிறவியும் வேண்டுவதே.

முதல்வன் பாதமே பற்றா நின்றாரைப் பற்றா பாவமே.

கற்றல் கேட்டல் உடையார் பெரியார்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தாலேயே மாற்ற முடியும் என்பதுஒரு சித்தாந்தம். மனிதன் உயர்ந்தவன்; அவனது வெற்றிக்கும் தோல்விக்கும் காரணம் உள் உணர்வுதான். இன்று, மானிடச் சந்தைக்கு வருகிறவர்களிற் பலர் தங்கட்குப் பிடித்தமானவற்றை எடுத்துச் செல்லாமல், பிடிக்காதவற்றைப் பற்றியே பேசிப் பேசி மானிடச் சந்தையைக் கலகக் காடாகவே ஆக்கி வருகிருர்கள். மானிடச் சந்தை கலகக் காடாகவே மாறிக் கொண்டும் வருகிறது. பொதுவாக, இன்று மானிடச் சந்தையிலே 95 விழுக்காடு நல்லவர்களாக இருந்தாலும், கெட்டவர்களாக இருக்கின்ற 5 விழுக்காட்டினரின் ஆற்றல் எஞ்சிய 95 விழுக்காட்டினரையும் ஆட்டிப் படைக்கிறது. எனவே தான் மானிடச் சந்தையில் நல்லவர்களாக மட்டும் இருப்பது போதாது—நல்லவர்கள் வல்லவர்களாகவும் இருக்க வேண்டுவது இன்றியமையாதது என்று நான் அடிக்கடி குறிப்பிடுவதுண்டு.

கிரேக்க நாட்டின் தலைநகரம்; பல்லாயிரக் கணக்கான மக்கள் நடமாடும் முச்சந்தி. பட்டப்பகல் நேரம். ஒரு பெரியவர் கையிலே தீவட்டியை ஏந்திக் கொண்டு எதையோ தேடிக்கொண்டு வருவது போல வருகிருர்.

'என்ன தேடுகிறீர்கள்?' என்று கேட்டார் ஒருவர். அந்தப் பெரியவர் சாவதானமாக,

'மனிதனைத் தேடுகிறேன்' என்று பதில் கூறினுராம். இந்த பதில் முதலில் நமக்குச் சற்று வியப்பாகவும் புதிராகவும்தான் இருக்கும்.

'விலங்கொடு மக்கள்
அனையர் இலங்குநூல்
கல்லாரோ டேனை யவர்'

'தமிழகம்' தரும்
புத்தாண்டுப் பரிசு

தவத்திரு அடிகளார் அவர்களின் எழுத்தோவியங்களையும், சொற்பொழிவுகளையும் தாங்கி வெளிவரும் தமிழகத்தின் ஆண்டுச் சந்தா ரூ 5. வருகிற புத்தாண்டுப் பரிசாகத் தமிழகத்தின் ஆண்டுச் சந்தாவை ரூ 3 ஆகக் குறைத்திருக்கிறோம். வருகிற சித்திரை முதல் நாளுக்குள் சந்தாக் கட்டுகிறவர்கள்

ரூபா மூன்று மட்டும்


கட்டினால் போதும். ஓராண்டுக்குத் தமிழகம் தொடர்ந்து கிடைக்கும். இந்தப் புத்தாண்டுச் சலுகையை எத்தனைபேர் பெறப்போகிறீர்கள்? எங்கே பார்க்கலாம்!

......மேலாளர்......

'தமிழகம்'—குன்றக்குடி
(இராமநாதபுரம் மாவட்டம்)

★

Registered No. M. 7058 THAMILAGAM - Weekly 4-3-63



என்று பேசுகிறார் திருவள்ளுவர். இன்று, மானிடச் சந்தை புறத்தே போர்த்திக் கொண்டு வாழ்கிறதே தவிர அகப்போர்வையை இழந்துவிட்டது. இந்த நிலைமையால் மானிடச் சந்தை அழுகிப் போனது போலத் தோற்றம் அளிக்கிறது. இன்றைய மனிதன் வெள்ளத்தை விலங்கைப் பேயை பெருந்துன்பந்தரும் நோயைக் கண்டு கூட அஞ்சவில்லை. தன்னையொத்த மனிதனைக் கண்டே அஞ்சும் நிலைக்கு வந்துவிட்டான். அவ்வளவு தூரத்திற்கு வாழ்க்கைப் போக்கு நசித்திருக்கிறது. ஆணவமும், ஆதிக்க சக்தியும் மனிதனைப் பிடித்து ஆட்டுகின்றன. மனிதன் இவற்றிலிருந்து விடுதலை பெறவேண்டாமா? மற்றவர்களையும் மகிழ வைக்க வேண்டாமா? மானிடச் சந்தையின் தரம் உயர வேண்டுமானால், சிந்தனையால் —செயலால் இன்ன பிறவற்றால் மற்றவர்களுக்கு மகிழ்ச்சியூட்ட வேண்டும்; கருத்து வேற்றுமைகளுக்கு மதிப்புக் கொடுக்காமல் வேற்றுமைகளை உள்ளடக்கி விழுமிய ஒருமைப்பாட்டைக் காண வேண்டும்: கருத்து வேற்றுமைகளால் புதிய கட்சிகளைத் தோற்றுவிக்கக் கூடாது. எறும்பு, தேனீ, கறையான் இவற்றைப் போல ஒருமைப்பாட்டோடு வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். ஒப்புரவுக் கொள்கை மானிடச் சந்தைக்கு மிகமிக இன்றியமையாததாகும். மானிடச் சந்தையில் மனிதர்கள் ஒருவரோடொருவர் மனங்கலந்து பழக வேண்டும். புதிய கருத்துக்களையும், புதிய சித்தாந்தங்களையும் கண்டு, அவற்றைச் செழிப்புடையனவாக வளர்க்க வேண்டும். மானிடச் சந்தையைக் கருத்துப் புரட்சியுடையதாக ஆக்கவேண்டும்.

வாழ்க்கையில் போட்டி இன்றியமையாததுதான். போட்டியில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காகத் தவறு செய்யக் கூடாது. திறந்த வெளியில் திறந்த மனத்தோடு வாழ்ந்து வெற்றி பெற வேண்டும். மானிடச் சந்தையைத் தரம் உடையதாக-தகுதி உடையதாக-நாணயம் உடையதாக ஆக்குங்கள். அன்பும் அறமும் மானிடச் சந்தையில் இடம் பெறுமாறு செய்யுங்கள்!

★

வெளியிடுவோர், ஆசிரியர்: ஆறு. சுப்பிரமணியன், அடிகளார் அச்சகம், குன்றக்குடி.
இராமநாதபுரம் மாவட்டம். துணை ஆசிரியர்: சாமி பழனியப்பன்.